**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்</u>**

அசல் வழக்கு எண்.258/2020

நாள்: 17.11.2025.

பி.வா.சா.2 – சையத்இஸ்மாயில்

2025–ம் ஆண்டு நவம்பர் 17–ம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியாது. தாவா சொத்தின் நான்கெல்லை தெரியும். வடக்கில் சேகர், தெற்கு, கிழக்கு, மேற்கு பக்கங்களுக்கு நான்கெல்லை தெரியாது. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எப்போது கிரையம் கொடுத்தார் என்று தெரியாது. 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கொடுத்தை கிரையத்தை பற்றி தெரியாது என்றால் கேள்விபட்டுள்ளேன். என்னிடம் சிங்காரவேலு சொல்லியுள்ளார். நான் சிங்காராவேலுவிடம் வாடகை ஒப்பந்தம் போட்டேன். வாய்மொழியாக தான் ஒப்பந்தம் செய்துகொண்டோம். 2003–ல் வாய்மொழியாக ஒப்பந்தம் பேசினோம். முன்பணம் ரூ.1000/– கொடுத்தேன். மாத வாடகை ரூ.500/– ஆகும். நான் அந்த வீட்டை காலி செய்யும் வரைக்கும் ரூ.500/– தான் வாடகை கொடுத்தேன். வாடகைக்கு இரசீது எதுவும் போடவில்லை. எனக்கு சொந்த ஊர் கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் உள்ள முட்லூர் கிராமம் ஆகும். நான் தற்போது வாதியின் மாமனார் வீட்டில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். இதற்கு முன் சாவடி மேலவீதியில் இரத்தினம் முதலியார் வீட்டில் வசித்து வந்தேன் என்றால் சரிதான். இரத்தினம் முதலியார் வீட்டில் முன்பு 1993–ல் இருந்து 2000 வரை வசித்து வந்தேன். 2003–ல் இருந்து 2010

வரை சண்முக முதலியார் வீட்டில் குடியிருந்தேனா என்றால் இல்லை. 1990 முதல் 1993 வரை என்னுடைய மாமனார் வீட்டில் வசித்து வந்தேன். நான் குடியிருந்த தாவா வீட்டில் மேல் கூரை இருந்ததா என்றால் நான் குடியிருந்தபோது இருந்தது தற்போது இல்லை. எப்போது மேற்கூரை இல்லை என்றால் நான் காலிசெய்த 2 வருடங்களுக்கு பிறகு இல்லை. தாவா சொத்தும் அதற்கு கீழ்புறம், வடபுறம் உள்ள சொத்துகளும் வாதி அனுபவதில் உள்ளது என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி அனுபவத்தில் தான் உள்ளது. 3ம் பிரதிவாதி தாவா சொத்தை எப்போது கிரையம் வாங்கினார் என்று தெரியாது. பிரதிவாதிகள் எனக்கு நெருக்கமானவர்கள் என்பதாலும் அவர்கள் எனக்கு பணம் கொடுத்ததால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதியின் மாமனார் வீட்டில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால் 2010-ல் இருந்து குடியிருந்து வருகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,<br>
சிறப்பு நீதிபதி எண்.2 (FAC),<br>
ஜெயங்கொண்டம்.